

Madurai Symposium 2007
Advancing Development
Building Alliances
24-29 September



செய்தியறிக்கை

செப்டம்பர் 28, 2007

# பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் சுயஉதவிக்குழுக்கள்

இந்திய குறுநிதிக் குழு கூட்டமைப்புகளின் பேரிணையம் சார்பில் மக்கள் தலைவர்களுக்கான மறுமலர்ச்சி முகாம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து நூறு கூட்டமைப்புகளின் தலைவிகள் நானூறு பேர் கலந்து கொண்டனர். பேரிணையத்தின் திட்ட நிர்வாகி நரேந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைமை உரையாற்றிய பேரிணைய முதன்மை நிர்வாகி சாந்தி மதுரேசன், 'ஒவ்வொரு கூட்டமைப்பிலும் உள்ள தலைவிகள் குடும்ப மேலாண்மை, பண்புகள் போன்றவற்றில் எவ்வாறு தங்களது செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் பேரிணையத்தை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதையும் சுயவிமர்சனத்தோடு அணுக வேண்டும்' என்றார்.

தானம் அறக்கட்டளையின் திட்டத்தலைவர் நரேந்தர் தனது வாழ்த்துரையின் போது, 'நாட்டின் சில பகுதிகளில் வங்கிகள் ஆதரவுக் கரம் நீட்டாத நிலையிலும் சொந்தக் காலில் நிற்கக்கூடிய அளவிற்கு பெண்கள் தன்னம்பிக்கை பெற்றுள்ளதற்குக் காரணம் சுயஉதவிக்குழுக்களே. ஒரு நிர்வாகம் நல்ல முறையில் செயல்படுவதென்பது அதன் சிறப்பான தலைமையைப் பொறுத்ததாகும். தாய் தனது குழந்தையை நன்றாகப் பராமரித்து வளர்ப்பது போன்று ஒரு தலைவி தனது குழுவை வழிநடத்திச் செல்வது மிகவும் அவசியம்' என்றார். 'செர்ப்' நிறுவனத்தின் திட்ட மேலாளர் சுதாகர் தனது வாழ்த்துரையின் போது, 'சுயஉதவிக்குழு என்றழைப்பதை விட சமத்துவக்குழு என்பதே பொருத்தமாக இருக்கும். ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து விட்டுக்கொடுத்தலோடு நீங்கள் நடந்து கொள்வது ஆரோக்கியமான நல்ல விளைவுகளை உண்டாக்கும் என நம்புகிறேன்' என்றார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட தலைவிகள் அனைவரும் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, கலந்துரையாடல் நடத்தினர். மக்கள் நிறுவனங்களில் தலைவிகளுக்கான கட்டளைகள், கூட்டமைப்புகளில் செயல்படுத்த வேண்டிய விசயங்கள் குறித்தும், பேரிணையத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்தும் விவாதங்கள் நடைபெற்றன. முன்னதாக கரும்பாலை களஞ்சிய வட்டாரத்தைச் சார்ந்த களஞ்சிய உறுப்பினர்களின் குழந்தைகள் பங்கேற்ற நடன நிகழ்ச்சியும், குறுநாடகமும் நடைபெற்றன. களஞ்சியம் அறக்கட்டளையின் அணித்தலைவர் இரமேஷ் நன்றியுரையாற்றினார்.

மாலையில் நடைபெற்ற நாட்டுப்புறக் கலைவிழாவில் திண்டுக்கல் சக்தி கலைக்குழுவினரின் தலைமைத்துவத்தைப் பிரதிபலிக்கும் பறையாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. குறும்படவிழாவில் இத்தாலி, பிலிப்பைன்ஸ, கனடா நாடுகளைச் சேர்ந்த குறும்படங்கள் திரையிடப்பட்டன. சுயஉதவிக்குழுப் பெண்களால் தயாரிக்கப்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்